பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௨. } பிங்களஹு தைமீ 1918ஹு ஜனவரிமீ { பகுதி ௧௨.

புதல்வர் கடமை.

(324-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் நாம் கூறி வந்தவை, 'தாய்தந்தையராது ஜீவதிசை யில், அவர்கள் தன்னுணர்வுடன் இருக்குங்கால், உத்தம மக்கள் செய்து தீரவேண்டிய கடமைகளாகும். அன்னை தந்தையரின் அந்திய காலத்தும், அவர்கள் இறந்த பின்னரும், செய்யவேண்டிய வேறு சில அதிமுக்கிய கடமைகளும் உள: "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதையும்,

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள், சதம்கச்சி ஏகம்பனே!"

என்பதையும், அவர்கட்கு விருத்தாப்பிய திசையிலேனும் ஒல்லும் வகையால் உணர்த்திவர வேண்டும். ஈன்றோர் இறக்குந் தறுவாயில் அவர்களைப் பிரியாது, உயிர் பிரியும் வரை அவர்களுடன் இருத்தல் வேண்டும் மற்றும்,

"அவாவென்ப தெல்லா உயிர்க்கு(ம்)எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

ஆகலின், பெற்றோர்களது மரணத்தறுவாயில், தம் மீதும் ஏனைய உற்றார் உகந்தார்மீதும், பற்றுற, அச்சமயம் அவர்களது மனம் கலங்கும் எவ்வார்த்தையும் மக்கள் சொல்லலாகா... அவர்கள் எதிரில் நின்று அழுவாவது கூடாது.

இறப்போரது எண்ணம் முழுதும் எல்லாம் வல்ல இறைவனது இணையடியில் இசையும்படி, ஆசார ஞான சீலர்களைக் கொண்டு ஈசுவரனது திருநாமத்தையும், திவ்ய ஸ்லோகங்களையும், தேவார, திருவாசக, திருவாய்மொழியாதிய திருவருட் பாக்களையும், ஓதுவித்து, மெய்ஞானச் சுடர் கொளுவி, அஞ்ஞான இருளை அறவொழித்திட முயல வேண்டும். நிற்க.

"எழுமைப் பிறப்பும் தீவினைவந் தெய்தாச் சிறப்பும், தென்புலத்தார் முழுதும் உவக்கும் கடன்சால் முடிக்கும் மாண்புழ், பெற்றிடலே,"

நன்மக்களைப் பெறுதலின் நோக்கம் ஆகும். இதன் உண்மையை பின் வரும் திருக்கூவப் புராணச் செய்யுளால் அறிக:—

"இல்லொழுக்கம் இயைந்து பிதுர்க்கடன்
ஒல்லும் வண்ணம் உஞற்றி மரபுளோர்
செல்லும் வான்நிரயத்துயர் சிந்துவான்
வல்லமக்கட் பெறற்கிணை மற்றிலை"

ஆகலின், தாய்தந்தையர் இறந்தபின், மக்கள், தம் குலாசாரத்திற் கேற்ப, தீக்கடன் முதலிய உத்தர கிரியைகளை உலோபமின்றியும், தம் பொருள்அளவிற் கேற்பவும், விதிப்படி செய்து முடித்தல் வேண்டும். "பிதுர்க்கடன்" ஆற்றித் தீரவேண்டியதன் அத்தியாவசியத்தை, 'மறச்செயலாளர்' என நாம் இகழ்வோருள் ஒருவர், 'அறச்செயலாளர்' என நாம் புகழ்வோருள் இருவர், ஆகிய மூவரது சிரத்தை மிக்க செய்கைகளாற் கூறி வற்புறுத்துவாம்.

அன்பருள் இல்லா அரக்கர்குலத் தோன்றலும், ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் ஆண்டும் திருப்தியுறாத சூரபத்மனது மகனும், அதி சூரனுமான இரணியனுக்கு இவ்விஷயத்தில் இருந்த சிரத்தை எவ்வளவு பாருங்கள்!:

முருகக்கடவுளின் சோதரர்களாகச் சொல்லப்படும் நவவீரர்களில் மூத்தோராகிய வீரவாகுதேவருடன் இவ் இரணியன் கடும்போர் புரிந்து, சேனையாவும் இழந்து வலியொடுங்கிய சமயத்தில், அவன் எண்ணியவைகளும், செய்த அருஞ் செயலும் கந்தபுராணம் படித்தோர் மனத்தைவிட்டு அகலா. ஆயினும் அறியாதார் அறியவும், மறந்தார் நினைப்புறவும் நிகழ்ந்ததைச் சுருங்கக் கூறுகிறோம்:

போரில் வலியொடுங்கிய இவ் அதிசூரன், "ஆ! ஆ!! எனக்கு முடிவுகாலம் கிட்டிவிட்டது. இனி நான் உயிருடன் திரும்புவது அரிது" என்று ஒருசமயம் எண்ணுவான் பிறகு, "சீ! என்னவோ பிதற்றுகின்றேனே. உயிர் தப்பவா முடியாது? அதற்கு எத்துணை வழிகள் உள" என்று அவ்வழிகளைக் கணக்கிடுவான்: சிறிது நேரத்திற்

கெல்லாம், "பன்னருங்கிளையும படையும் இழந்த யான், பரிபவமுற்று உயிருடன் இருந்துதான் பயன் என்ன?" என்று கருதுவான். மீண்டும், "நான் இறப்பதைக குறித்து எனக்கு விசனமில்லை. இனி என் தந்தையாரும் இறத்தல் திண்ணம. அதுதான் எனக்கு யோசனையாயிருக்கிறது: அவர் இறப்பின் அவரது அந்திய கர்மத்தைச் செய்யச் சுற்றத்தார் எவரு மில்லையே!" என்று இரங்குவான். மறுபடியும், "விதிவலிது! உறுதிகள் பலகூறியும் அவற்றை உட்கொள்ளாத என் தந்தை கண்முன், யான் இறந்தால் தான் என்ன? முன்வைத்தகால் பின்வாங்காது நான் பொருது, போர்க்களத்திற் பொன்றுவேனாயின், புகழை பெறுவேன் அங்ஙனமின்றி யுக்தியால் தப்பி ஓடிவிடுவேனாயின் 'உடம்பைப் பொருளென எண்ணி உய்ந்தான் இரணியன்' என்றவசை என்னைவிட்டென்றும் நீங்காதே" என்று ஏங்குவன். அதன் பிறகு, "அந்தோ! என்மதி சென்றவாறென்னே! போர்க்களத்தில், இறந்து புகழ்பெறக் கருதுவேனாயின், 'தீக்கடன் முதலியன செய்யப் புத்திரனற்ற பாவி' என்ற வசை, உயிருடன் இருக்கும் என் தந்தையை அடையுமே" என்று ஏங்குவான். இவ்வாறு அவன் பற்பல எண்ணித் தவித்து, கடைசியில்,

"மைந்தரைப் பெறுகின்றதும் மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்,
தந்தை மாண்டுழி தம்முறைக் கேற்றிட
அந்த மில்செயல் ஆற்றுதற் கேயன்றோ?"

என்னை எவ்வசை எய்தினும் எய்துக. எந்தையை எய்துதல் அழகன்று" எனத் துணிந்து, தன்னைச் சூழ்ந்து வளைந்திருந்த வலிமிக்க சேனைகளினின்றும் அதி சாமர்த்தியமாய், தந்தையின் அந்திமக் கிரியை செய்யும் பொருட்டே தானிருக்குமாறு, உயிர் தப்பி ஓடினன் இரணியன்!.

மக்கட் பிறவியினின்றும் தோற்றத்தினும் வடிவமைதியினும் இயற்கைத் தன்மையினும வேறுபாடுடையவர்களென்றும், தீயொழுக்கம் மிக்கரென்றும், அறிந்தோ அறியாமலோ நம்மவரிற் பெரும்பான்மையோர் பழிக்கும் இவ் அரக்கர்குல வீரனுக் கிருந்த பக்தி சிரத்தையில், அவனினும் நற்குண நற்செய்கை வாய்ந்தார் தாங்களென நாணமின்றி நவின்றும், நம்பியும், தம்மையும் பிறரையும் வஞ்சித்துத் திரியும பெரும்பான்மையோரிடம் 'இவன் சிரத்தையில் இம்மியாவது கண்டிருப்பீர்களா? அன்பர்காள்! மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் சொல்லுங்கள். இது நிற்க.

முற்றத் துறந்த முதறிஞரும், பரம சாதுக்களுமான இருவர், தம்மை ஈன்றோர்களது விஷயமாகச் செய்த மேதகு செய்கைகளையும் கேளுங்கள்

சிதம்பரத்தில், வேதியர்குல மணிகளாகிய விசுவசித் என்பார்க்கும் அம்பிகையார்க்கும் அருமைக் குமாரராக, இற்றைக் கேறக்குறைய 2165 வருடங்கட்கு முன் அவதரித்து, "நன்றவரும் என்றெண்ணி நல் அறிவாளர் குழவியிடத்தே துறந்தார்" என்பதற்கேற்பவும், 'பொன்னை மாதரைப் பூமியை' நாடாதும், பால சந்நியாஸம் மேற்கொண்டு, அத்வைதக் கொள்கைகளைப் பலவிடங்களிலும் பரப்பி, ஷண்மதஸ்தாபனம் செய்து, 'லோககுரு' என்று போற்றுநராற் பேணப்பட்டு வரும் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளையும்,

காவிரிப்பூம் பட்டினத்திலே, வணிககுல திலகர்களாக வயங்கிய சிவசருமர் என்பார்க்கும், ஞானகலாம்பையார்க்கும், பெறற்கரும் பேறாக இற்றைக் கேறக்குறைய 1320 வருடங்களுக்கு முன் பிறந்து, நற்குணம் நிறைந்த உத்தம மனைவியுடன் இல்லறமேற்கொண்டு சிலகாலம் வாழ்ந்து, பிறகு, ஒருநாள், நல்லூழ் தூண்ட, வைராக்கிய மேற்கொண்டு,

"தீதுற்ற செல்வமென்? தேடிப்புதைத்த திரவியமென்?
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே"

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே. விழிஅம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே. விம்மி விம்மிஇரு
கைத்தலம் மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே,
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே".

என்பவற்றை ஓர்ந்து, உலகு துறந்து, பிற்காலத்தவராகிய ஸ்ரீமத் தாயுமான ஸ்வாமிகளால்,

"பார்அனைத்தும் பொய்எனவே பட்டினத்துப் பிள்ளையைப்
ஆரும் துறக்கை அரி(து)அரிது!" [போல்

என்று வியந்துரைக்கப்பட்ட வித்தகராகிய திருவெண்காட்டடிகளையும் பற்றிக் கேள்வியுற்றிரார் யார்?

"மாயிரும் புவியோர் உய்யவிளங் கியஅம்
மாதவ சங்கர குரவர்
ஆயிரம் விதத்தும் ஆசையைத் துறந்தும்
அன்னையின் பற்றொழித் தனரோ?

அம் மகான், தமது தாய்க்குத் தாம் அளித்த வாக்குப் பிரகாரமே, அவளது அந்திய காலத்தில் வந்து உதவியதையும், அவளது ஈமக்கடனை நிறைவேற்றிய விதத்தையும், "சங்கரவிஜயம்" முதலிய நூல்களால் நன்கறியலாகும். நிற்க,

வாழைப் பட்டைகளால் சிதையடுக்கி அதன்மீது தம் அன்பார்ந்த அன்னையைக் கிடத்தி,

(1) "ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி"

(2) "முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாய்தனக்கோ ஐயோ!
எரியத் தணல்மூட்டு வேன்."

(3) வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

(4) நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துந் தாழாமே—அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்."

(5) அரிசியோ நான் இடுவேன்! ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—'உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! என் அழைத்த வாய்க்கு"

(6) அள்ளி யிடுவ(து) அரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முக(ம்)மேல் முகம்வைத்து முத்தாடி 'என்றன்
மகனே!' என அழைத்த வாய்க்கு" —என்று.

மீயுயர் மதியால் யாவையும் துறந்த
மேதகு பட்டினத் தடிகள்
தாயிறந் ததனு லேதவித் தழுத
தனிமையை அறிந்திலார் எவரே?

இங்ஙனம் கதறிக் கண்ணீர் வடித்த அம்முனிபுங்கவர், பிறகு

"முன்னை யிட்ட தீ முப்புறத்திலே
பின்னை யிட்ட தீ தென்இலங்கையில்
அன்னை யிட்ட தீ அடிவ யிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே"

என்றுகூறித் தீமூட்டி, அது மூண்டெரியும் போது,

"வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே! பாவியேன்! ஐயகோ!—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை"

என்று இரங்கிக் கூறி, அவள் தேகம் வெந்து சாம்பலானதும்,

"வெந்தாளோ! சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ!—சந்ததமும்
உன்னையே சிந்தித் துகந்து வரங்கிடந்தென்
றன்னையே ஈன்றெடுத்த தாய்"

என்று துக்கித்து, மறுநாட்காலையில்,

"வீற்றிருந்தாள் அன்னை வீதி தனில்இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்"

என்று அனைவர்க்கும் கூறி, மனந்தேறி, உறவினர் முதலிய யாவரையும் வருவித்துச் சஞ்சயனமாதி நிறைவேற்றினர் என்று கேட்கப் படுகிறதன்றோ?

சர்வசங்கப் பரித்யாகம் செய்த இன்னோரும், சான்றோர்க்குக் கொள்ளிவைத்துக் குடம் உடைத்துப் பால்தெளித்து உத்தரக் கிரியைகளை ஒழுங்காகச் செய்தனராயின், நம்போன்றோர்களுக்கு அது இன்றியமையாததென்ன வற்புறுத்தல் நகைதரும் மிகையேயன்றோ?

'சிராத்தம்' என்பதற்குச் 'சிரத்தையுடன் செய்யப்படுவது' என்பது பொருளாதலின், பிதுர்க்கட்குச் 'சிராத்தம்' முதலியன இயற்றுவோர், சிரத்தை-பக்தி விசுவாசத்துடனேயே அவற்றை இயற்றல் வேண்டும். பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்களைப் பேணாது, ஊரார் மெய்ச்ச 'நித்திய சிராத்தம்' முதலியனவும் செய்வதாய்ப் பாவனை காட்டியும், இறந்ததன்பின் ஏராளமாகத் திரவியச் செலவிட்டும் வரும் பேதைமாக்களது புன் செய்கை வெறுப்பிற்கும் நகைப்பிற்குமே இடமாகும். இத்தகைய செய்கையால், பிதுர்க்களுக்கேனும் செய்வோர்க்கேனும் ஒரு நற்பயனும் உண்டாகாது. தம்பொருளுக்கேற்ப, வருடந்தோறும் பெற்றோர்கள் இறந்த திதியிலும், புரட்டாசி மாதத்திலுமாவது, சற்பிராமணர்களைக் கொண்டு, விலக்கியன தவிர்த்து, விதித்தனபுரிந்து உரிய காலத்தில் பக்தி சிரத்தையுடன் செய்யும் சிராத்தமே, செய்வோர்க்கு நலம் அளிக்கவல்லதென்பர் மேலோர். ஆதலின் சிராத்தத்துக்குப் பொருளினும் சிரத்தையே அவசியம் வேண்டும்.

அன்பினும் அபிமானத்தினும் சிறந்த சகோதர சகோதரிகளே! ஏதோ நம் புல்லறிவுக்கெட்டியமட்டும் சான்றோர்களது ஜீவதிசையிலும், அவர்களது அந்தியகாலத்திலும், அதற்கும் பிறகும் நன்மக்கள் செய்யவேண்டிய கடமைகளை ஒருவாறு கூறினோம். இன்னும் எவ்வுளவோ கூற வேண்டுமென்பது எமது விருப்பம். ஆயினும் விஷயத்தை ஆரம்பித்து வருஷம் இரண்டாவதால் நாம் சொல்ல விரும்பியவற்றை இத்துடன் நிறுத்திக் கொண்டோம். இப் "புதல்வர் கடமை"யைக் கூடியசீக்கிரத்தில் தனிப்புத்தகமாக அச்சிட ஆவல். அங்ஙனம் அச்சிடநேரின் இனியும் நாம் சொல்லித் தீர வேண்டியவற்றை அதிற் சேர்த்து வெளியிடுவோம். இதுவரை யாம் கூறியவற்றுள்,

'குணநாடிக் குற்றமும்நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'.

பத்திராதிபர்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

பதினைந்தாவது அத்தியாயம்.

இந்துசர்மன் இரட்டுற மொழிதல்.

மற்றொருநாள் மாலை சாணக்யனும், சந்திரகுப்தனும், மிதமான பரிவாரத்துடன் ஆஸ்தானத்தில் இருக்கக்கண்டு, ராக்ஷஸனுக்கு மித்திரன் போல் நடந்து வரும் க்ஷபணகன், 'இதுவே தக்க சமயம்' என்று அமாத்யன் அனுப்பிய கன்னிகையை அழைத்துக் கொண்டு வந்தான்.

ஆ! ஆ! முத்தாபரணங்களை தரித்து சிவப்புப் பட்டை முக்காடிட்டுத் தோன்றிய அவளைக் கண்டு, "இவள் நக்ஷத்திரங்களுடன் விளங்கும் சந்தியாகால லக்ஷ்மியோ? அமிருதம் உண்டான சமயம் ஸ்திரீ வேஷம் தரித்துக் கடைக்கண் பார்வையினாலேயே அசுர வர்க்கங்களின் மனதை மன்மத விகாரத்திற்கு உட்படுத்திய ஸ்ரீமந் நாராயணனது மோஹினி ரூபமோ? சுந்த உபசுந்தர்கள் என்ற அசுரரை வெல்லும நிமித்தம் பிரமாவினால் சிருஷ்டிக்கப் பட்ட ஊர்வசியோ? கண்ணால் கண்ட மாத்திரத்தில் கூட்டங் கூட்டமாகத் தொடர்ந்து வரும் விட ஜனங்களின் சித்த விருத்தியை அபகரித்துச் சஞ்சரிக்கும் சிங்கார கலையோ? லாவண்யமே ஓர் ஸ்திரீ ரூபமாக வந்திருக்கிறதோ?" என்று அவளை வியவாதார் இலர்.

உருவற்ற பதார்த்தம் போல் ஸ்பரிசிக்க முடியாததும், சித்தரிக்கப் பட்ட உருவம் போல் போகத்திற்கு உபயோக மற்றும், கேவலம், கண் பார்வையினாலேயே ஜனங்களின் சித்தத்தைக் கலக்கியும், அதர்வண வேதிகளுக்குப் பிரியமான ஆபிசார வித்தையே ஸ்திரீ உருவமாக வந்தது போலுமிருந்த அவள்; ஸ்வர்ண கலசம் போன்ற ஸ்தன பாரத்தினால் ஆடி அலையும், சிறுத்த இடையுட னும், மின்னற் கொடி போன்ற தேக லாவண்யத்துடனும், பூர்ண சந்திரன் போன்ற முக மண்டலத்துடனும், கார்மேகக் கூட்டம் போன்ற கேச பாரத்துடனும், வேல் விழிகளைக் கொண்டு நோக் கும் கம்பீரமான பார்வையுடனும் விளங்கினாள். இவ்வாறு பிர காசிக்கும் அந்தப் பெண்மணியுடன் வந்த க்ஷபணகன் சந்திர குப்தனை, 'தர்மாபிவிருத்தி யுண்டாகுக' என்று வாழ்த்தி, அக் கன் னிகையை அவன் முன் நிறுத்தினான். அத் தருணி, நவரத்ன கங்கணங்களால் மனோகரமாகத் தோன்றும் கைகளைக் கூப்பிச் சந்திரகுப்தனைக் கும்பிட்டு, கடைக்கண் பார்வையாகிய வலையை வீசி மந்தகாசத்துடனும், தலை குனிந்த வண்ணமாகவும், க்ஷபண கனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

சாணக்யன் அக் கன்னிகையின் அதிசயமான சௌந்தரியத் தைக் கண்டு க்ஷபணக வேஷந் தரித்திருக்கும் தனது மித்திரனை இந்துசர்மனை அறியாதவன் போல அபிநயித்து, "ஐயா! க்ஷபண கரே! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தங்கள் நாமதேயம் யா தோ? 'சாபத்தினால்-புரூரவச் சக்ரவர்த்தியைக் கண்டு மோஹித் துப் பூமியில் வாசம் செய்த ஊர்வசியோ! பிரமரிஷியாக வேண்டு மென்று கொடுந்தவம் புரிந்த விசுவாமித்திரரது தவத்தைக் கெடுக்க வந்த 'ஹேமை' என்ற அப்ஸரஸ்திரியோ! அல்லது ருக்மாங்கத னது மனதைச் சோதிக்க வந்த மோஹினியோ!' என்று ஐயுறத் தக்கவளாயும், ஸர்வாங்க சுந்தரியாயும், நவ யௌவனசாலினியா யும் உள்ள இப்பெண் யாருடைய புத்திரி? தங்களுக்கு எவ்விடத் தில் கிடைத்தாள்? தங்கள் தேசம் எது? அப் பெண்ணையும் உட் காரச் சொல்லித் தாங்களும் உட்கார்ந்து எல்லாவற்றையும் விவர மாகத் தெரிவிக்க வேண்டும்" என்றான்.

அதற்கு அவன், "ஐயா! முன்னம் நந்தர்களுக்கு ஆப்தரா யிருந்து, இப்பொழுது சந்திரகுப்தனைக் கண்டு பயந்து சென்றிருக் கும் அமாத்ய ராக்ஷஸருக்கு நான் சிநேகன். என்னை ஜீவஸித்தி என்று சொல்வார்கள். இந்த யுவதி யாரெனில், சிறைப்பட்ட வல்லப ராஜனுடைய புத்திரி. இவளைப் பாலியம் முதல் பதி னைந்து வயது வரை போஷித்து நாட்டிய சங்கீத வித்தைகளில் தேர்ச்சியுறச் செய்யும்படி என்னை ஏற்படுத்தினார் ராக்ஷஸர். என் னால் பயிற்றுவிக்கப்பட்ட இவளது கல்வித் திறமையைக் கண்டு

சந்தோஷப்பட்டு அவன் இவளை ஜேஷ்ட நந்தனுக்குப் பிரிய புத்திரியாகச் செய்ய வேண்டுமென நிச்சயித்திருந்தான். தெய்வ வசத்தினால் நடந்த விபரீதங் கண்டு சகிக்கமாட்டாமல், ராக்ஷஸன் வேற்றிடம் சென்றுவிட்டான். சென்றுவிடவே, "ஐயோ! நான் அநாதையாய்விட்டேனே! ஆக்ரமமற்று வாடும் மாலதிக் கொடி போல் துவிக்கிறேனே! காட்டில் இறைக்கும் சந்திரிகைபோல் என் யௌவனம் வீணாயிற்றே!" என்று பிரலாபித்தனள் இத்தருணி; பாவம்! இவளைக் கண்டதும், எனக்கு மிகப் பரிதாபமுண்டாயிற்று. உடனே "அம்மா! குழந்தாய்! ராஜயோக்கியளான உனக்கு ஏற்ற பதியைக் காட்டுகிறேன்" என்று சமாதானம் செய்தேன். பரிபக்குவமடைந்து யௌவன திசையால் விளங்கும் இவளை இதரர் அபேக்ஷிப்பதற்கு முன்பாகவே தங்கள் ஸந்நிதானத்திற்கு அழைத்து வந்தேன். ராஜோத்தமரான சந்திரகுப்தருக்கு வெற்றிலை மடிப்பதற்கேனும், பாதசேவைக்கேனும், ஸமயம் போல் இங்கிதம் அறிந்து நடந்து கொள்ளக் கூடிய தன்மை யுடையவள் இவள் என்பதிற் சந்தேக மில்லை" என்றுரைத்து, "ஐயா! உசிதமான விஷயங்களை அறியக் கூடிய சாணக்யரே!" என்றழைத்து, ஒரு முறை ஜாடையாக அவனை உற்று நோக்கி, "இக்கன்னிகையைச் சாதாரண ஸ்திரீ என்றெண்ணலாகாது. அர்ச்சுனன் மனத்தை அபகரித்த நாக கன்னிகையாகிய உலூபி போல் அதிசாமர்த்தியம் வாய்ந்தவள். கால சர்ப்பம் போல் தோன்றும் கேச பாரத்தினால் ரஸிகர்கள் மனத்தை வசப்படுத்தக்கூடியவள். காளகண்டரது கழுத்தைப் போற் கறுத்த விழியால் தனது நாயகனது சித்தத்தை மோக சாகரத்தில் ஆழ்த்தி விடுவாள். இவளது தேக சுகத்தை அனுபவித்துத் திருப்தியுற்ற புருஷன், இவளைவிட்டகன்று சயனக் கிருகத்திலிருந்து திரும்பவும் வெளிவரான்." என்று சொல்லி நிறுத்தினான்.

இம் மொழிகளைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சாணக்யன், தனக்குள், "ஜீவஸித்தி இங்கிருப்பவர்கள் அறியா வண்ணம் ஜாடையாகச் சொன்ன வாக்கியங்களில், 'உலூபி' என்றும், 'காளகண்டரது கழுத்து' என்றும், 'காலசர்ப்பம்' என்றும், பதப் பிரயோகம் செய்ததிலிருந்து; இக் கன்னியிடம் விஷதோஷம் பிருதியும் உளதென்பது அறியக் கிடக்கின்றது. அன்றியும், "இவ

ளது சரீர சுகம் அனுபவித்தவன், திரும்பவும் சயனக்கிருகம் விட்டு எழுந்து வரமாட்டான்" என்றதால் 'இவள் சரீரத்திலுள்ள விஷ சம்பந்தத்தினால் இவளை அணைந்தவன் உயிருடன் திரும்பான்' என்ற விஷயம் விளங்குகின்றது. ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கொல்லுவதன் நிமித்தம் இவளை அனுப்பிவிட்டுப் பழிக்குப் பழி வாங்கும் எண்ணங் கொண்டு ஒளிந்திருக்கிறானேயன்றி, பயத்தால் அவன் ஓடிவிட்டதாகத் தெரியவில்லை. இவளிடம் இருக்கும் விஷதோஷத்தை நன்றாகப் பரீக்ஷித்துக் கொண்டு, இனி ஆகவேண்டியதைத் தீர்மானிப்போம்" என்று யோசித்துத் திரும்பவும் க்ஷபணகன் முகத்தை நோக்கினான்.

தன்னை நோக்கிய சாணக்யனைப் பார்த்து, க்ஷபணகன், கால தேச வர்த்தமானம் அறியும் ஐய! 'உன் தேசம் யாது?' என்று என்னைக் கேட்டீர்களல்லவா? சொல்கிறேன் கேளுங்கள்: ஒரு சமயம் பூலோகாதிபதியாக விரும்பிய ராக்ஷஸர், தேவர்களால் தோல்வியுற்றபோது, கடலில் ஒளிந்தும், பிறகு வெளிப்பட்டுப் பூவுலகை வருத்தியும், தேவேந்திரனால் துரத்துண்டு மீண்டும் ஒளிந்தும், பிறகு சமயம் வாய்க்கும் போது யாவரையும் இம்சித்து வந்தார்கள் என்பதும், இது பொருக இந்திரன், அகஸ்திய மகரிஷியை, ராக்ஷஸர் மறைந்த கடலையே பானம் செய்யச் செய்தான் என்பதும் நாம் அறிவோமே? இங்ஙனம் கடல் நீர் முழுதும் பானம் செய்யப் பட்டமையின் ராக்ஷஸர்க்கு இருப்பிடமற்றுப் போகவே, அவர்கள் பாதளத்தில் ஒளிந்து, தக்க சமயங்களில், பூமியின் நவ கண்டங்களிலும் இருக்கும் மகா பர்வதங்களை அடுத்தனர். அதனால் பக்கபலமுற்ற பெரிய பர்வதங்கள் மதமேறித் தங்கள் தங்கள் சிறகை விரித்து ஆகாயத்திற் பறந்து கொண்டு தமக்குத் தோன்றிய தேசங்கள்தோறும் விழுந்து பசு, பக்க பிரஜைகள், முதலிய யாவையும் நாசம் செய்யலாயின. இது கண்டு இந்திரன் கோபாவேசமுற்று, விருத்திராசுரனது குருதி குடித்துக் கொழுத்துக் கூரிய நுனி வாய்ந்த வச்சிராயுதத்தினால் அப் பர்வதங்களின் சிறகுகளை வெட்டி வீழ்த்திக் கொண்டு வந்தான். வருகிறவன், தேவர்களது வாசத்திற்குத் தகுதி வாய்ந்ததும், மகரிஷிகளால் கொண்டாடப் பட்டதுமான இமயபர்வதத்தைக் கண்டு, "இதுவும்

ஒருக்கால் ராக்ஷஸர்க் கிருப்பிடமாக ஏற்படக் கூடு"மென்று சந்தேகித்து, 'பர்வதராஜன்' என்றும் பாராமல், தாக்ஷிண்யமேயின்றி அவ் இமயமலையின் சிறகுகளையும் வெட்டி விட்டான். தன் தந்தை சிறகு அறுபட்ட தறிந்து, வாயுவின் ஏவுதலால் ஓடும் மைநாக பர்வதத்தைக் கண்ட இந்திரன், அதன் சிறகை வெட்டாமல், "பாதளத்திலிருந்து ராக்ஷஸர் வாரா வண்ணம், நீ இனி சமுத்திரத்திலிருந்தபடியே அவர்கள் வரும் பாதையைத் தடுத்துக் கொண்டிரு" என்று அதற்கு ஆக்ஞாபித்துத் தனது இருப்பிடம் சென்றான். இந்திரன் மட்டும்; முக்யமான பர்வதங்களின் பக்ஷங்களைச் சேதியாதும், கிரிராஜனை 'நமக்கு மிக உபகாரி' என்று எண்ணி அதனிடம் தாக்ஷிண்யம் காட்டி மன்னித்தும், மைநாகனைத் தன் உத்திரவுப்படி நடக்குமாறு நியமிக்காமலும் இருந்தால், உலகிற்கு ராக்ஷஸரது ஹிம்ஸை என்றேனும் நிவிர்த்தியாகுமா? அன்றியும் தேவேந்திரனது குருவான பிரகஸ்பதி பகவானது ஆசீர்வாதமும் முயற்சியும் வீணாகாதா? —இதெல்லாம் எதற்கு? — அந்தக்ஞேக்தமஸோ! நான் சொல்லவந்த தென்னவெனில், இந்திரன் அவ்விதம பர்வதங்களின் சிறகுகளை வெட்டும்போது அவற்றில் ஒன்று சிதறிக் கீழே விழுந்த இடம் 'வஜ்ரபாத க்ஷேத்திரம்' என்னப்படும். அதுவே என் தேசம்" என்றான்.

(இன்னும் வரும்)

வி. பாலம்மாள்.

மௌனதேசிகர்.

ஓர் ஹாஸ்ய நாடகம்.

காட்சி—8.

இடம்:—கலாசாலை. காலம்:—இரவு 7-மணி பாத்திரங்கள்:—நல்லகண்ணுக்கோன், வித்யாபூஷணன், தந்திரிதீரன், முதலியோர்.

[நல்லகண்ணு மிகுந்த கோபத்துடன் இருக்கும் போது கலாசாலை அதிகாரிகள் வருகின்றனர்]

நல், நல்ல சாமி ஐயா நீ—எத்தன் நாளி காக்கறது?

தங். என்னடா அதற்குள் ஆத்திரப்பட்டே. ஒன் சொத்தே ஆர்ரா கட்டிக்கிண் டேட்டா?

நல. என்ன சாமி! எப்ப வரச் சொன்னீங்க?

தங். ஆமடா என்ன செய்யரது? ஒனக்கு சாண்ட காட்டினாரே ஒரு பெரிய மனுஷர், அவர் ஊருக்குப் போராரும் அவ ரைப் பாத்தூட்டு வரப்போனேம். நாளியாச்சு. அதனால் என்ன?

நல். (முன்னிலும் கோபம் கொண்டு, மீசையை முறுக்கி) என்ன! அவனா பெரிய மனுசன்? அந்தச் சின்னச் சாதிப் பய போனா இல்லியா?

[எல்லாரும் பிரமித்து நிற்கிறார்கள்]

இருக்கட்டுங்க ஐயா! ஒருகை பாக்காமலா விட்டேட்ரது? நீங்களும் நல்லாளய்யா கூட்டியாந் தீங்க. பெரிய எச மானுக்காவ்ல பார்த்தேன். இல்லாட்டி நாருந் தோது மால்ல இருந் தெரிஞ் சிருப்பேன் அந்தப் பயலெ.

வித். ஏய்! ஏய்! என்னடா விஷயம்? ஏண்டா அவர் பேரில் இவ்வளவு கோபம்?

நல். கோபமா? படுக்காளிப்பய என்னமா இப்ப வருதுங்க எணக்கு?

தங். சமாசாரமென்னடா? ஆத்திரப்படாமே சொல்டா.

நல். சாமி! நான் சொல்லிப்பூட்றேன் இப்போ.—நீங்கதான் இந்த ஔவுக்கு ஒரு சாச்சியாயிருந்து நாயம் தீக்கணும் எங்கப்பா—எசமான்! நான் வந்தேனா? அந்தப் பாவிமவன் எண்ணைப் பாத்து, ஒத்தக்கண் பொட்டே இந்ரான்சாமி அப்பலே தானே வந்திருச்சு எணக்குக் கோபம். நானும் "ஏலே! அடக்குடா ஒன் ரண்டு கண்ணுக்கு, என் ஒத்தக் கண், சரி சமானண்டா லே"இன்னு என் ரேண்டு விரலெக் காம்பிச்சேன், காமபிச்சேனா, சாமி?—பய சவாப்புச் சொல்ல முளிச்சேபூட்டான்—அப்புறம் கொஞ்சம் ரோசிச் சாரு சாமி—ரோசிச்சுக்கிட்டு எண் நெத்தி ராமத்தைப் பாத்துப் பளிக்க ஆரம்பிச்சூட்டான் சாமி, மூணு விர லெக் காம்பிச்சுக் காம்பிச்சு.—

எல்லாரும் (சிரிப்பை அடக்கிக் கொண்டு) அப்புறம்?

நல். சும்மா விட்டுடுவேன் அவனை? வந்தூடுச்சே பார்ப்பம் கோவம். ஒடனே ரெண்டு செஞ்சேன்னு; "அடே சின்னச் சாதிப் பலே! அதிகமாக் கித்கமா வாலாட்டாதே, ஒட்டம் பிடிச்சாக்கும் அறுத்தூடுவேன், உசாராயிரு" இன்னு ஒரு வெரலால் சாடை காட்டினேன். பய தெரிஞ்சுக்கிட்டானே இல்லியோ, "இனிமே ஏதாவது கையாண்டி பண்ணினு ஒணக்குப் பூசை தானே விளும்." இன்னு தயாராத் தடிக்கம் பெடுக்க நாலு பக்கமும் பாத்தேனுங்க. பாவி மவன் எவனோல்லே அதை எங்கோ கொண்டு போயிட்டான். அப்புறம் பார்த்தேன். "சே—இப்பவேண்டாம், பின்னுக்குப் பாத்துக்குவோம், அவன் நம்மைப் பளிச்சானுலியோ நாமும் பளிப்போம்" இன்னு ரோசிச்சேன். சாமி காப்பாத்தினுர். இந்தப்பய என்னை நாமம் போட்டுத்துக் கில்லே பளிச்சான். நான் என்ன செஞ்சேனு அடே கொம்பன் மவனே! இப்படி 3-கோடு இண்ணாறு, அப்படி ஒரு கோடு சந்தனம், ஆக நாலு கோடு ஒன் நெத்தியிலே இருக்குண்ணு, நாலு வெரல் காம்பிச்சேன், ஆமய்யா, நீங்க எசமாங்க இருக்கரபோது எனக்கென்ன பயம்?

தந். பேஷ்! நீ சொல்றதும் செஞ்சதும் ரொம்ப சரி.

நல். கேளுங்க எசமான், அவனெப் பளிச்சேனு? வுந்திடுச்சு மூக்குக்கு மேலே கோபம்.

வித். யாருக்கு?

நல். அந்தத் திருட்டுப் படுக்காளிப் பயனுக்கு ஐயா. என் எசமாங்களோ! இவனுக்கு மாத்திரம் இப்பிட்டுக் கோபம் வந்ததே, எண்ணைப் பளிக்கிற போது எப்படி இராது இங்கிறேன்.

தந். ஆமடா, யாருக்கும் கோபம் வரத்தானே செய்யும்? ஆமா, அவனுக்கு வந்தூடுத்துக் கோபம் இன்னியே, அது உனக்கு எப்படித் தெரிந்தது?

நல். என்ன எசமான்? இதுகூடத் தெரியாது? எப்போ அந்

தப் பய அஞ்சு வெரலெக் காட்டினானே, அப்பவே "நிறுத் துடா அதோடே" இன்னு சொல்ற மாதிரிதானே? அம் புட்டுத் தெரியாதவன் மனிசனா?

தங். சரி. சரி. உன் கதையை முடி. நீ அதற்கு என்ன செஞ்சே.

நல். ஒடனே என்ன செஞ்சேண்ணா, கையெ மடக்கிக்கிட்டேன் அந்தப் பய மூக்கந்தண்டை ஒடைக்கல்ல போய்ட்டேன்— சத்தியமாச்சொல்றேன்: ஒடச்சே இருப்பேன்சாமி—ஒங்க ளுக் காவல்லா பயலெ சும்மா விட்டேட்டேன்.?—சாமி! எனக்கு அதுக்காக்கூட அவ்வளவு ரோஷம் வல்லீங்க. இது போராதுன்னு எசமான், அந்தக் காமாட்டிப்பய எனக்கு வாளப்பளம் தர வர்ரான் சாமி.

வித். தந்தால் என்னடா?

நல். என்னசாமி! நீங்களும் அவனோடே சேந்துக்குறீங்களே. சாமி! நாயஞ்சொல்லுங்க-நம்பளெப் படெச்சவன் எல்லா ரையும் ஒரே மாதிரியாவா உண்டாக்கி யிருக்கானாசாமி? உங்களெப்போல நானுவனோ? உங்க அள்கு எண்ண? என் லெச்சணம் என்ன?

தங். அதெல்லாம் எதுக்குடா இப்போ? உன் கதையைச்சொல்லு.

நல். அதானே சொல்றேன் எங்கப்பா— என் மூஞ்சி, ஊர் இன்னு கொரங்குபோலிருக்காம். அதுக்காகக் "கொரங்கே! வாளப் பளம் இந்தா" இங்கரான்சாமி! அவன் ரோக்கியதை எனக் குத் தெரியாது?

தங். நீஎன்ன சாமானியப் பேர்வழியா? என்னபதில்சொன்னே?

நல். விட்டுடுவேன் பயலெ? "அடே! ஒன் மனசுக்குள்ளே நீ ஒத் தன் தான் சாமார்த்தியக்காரன் இன்னு நினைச்சிக்கிட்டி யாக்கும்! ஒங்குறும்புயாரிட்டடா? நான்கொரங்கா இருந்தா நீயென்னாயிடா. சின்னச்சாதிப்பலே!" இன்னுகொண்டுவந்த சோத்துலே ரெண்டுபிடி அவனுக்கெதிரே போட்டேனுங்க. என் எசமாங்களே! "கொரங்குக்கு வாளப்பள" மின்னு நெனச்சுப் போட்ட பயலுக்கு, "நாய்க்குச் சோறு" இன்னு நான் நெனச்சுப் போட்டதிலே எண்ண தப்பு? சொல்லுங்

கப்பா—தப்பா யிருந்தால் சோட்டைக் கயிட்டிக்கிட்டே அடியுங்க—பட்டுக்கரேன். ஆமா.

[யாவரும் விழுந்து விழுந்து சிரிக்கின்றனர்]

தங் சரிதாண்டா நல்லகண்ணு. அப்படித்தான் அந்தப் பயனுக்குச் செய்யணும். அப்புறம் சீக்கிரம்சொல்லு நடந்ததை.

நல். இப்படிச்சோறுகாட்டிமூக்குடைச்சுட்டேன். உடைச்சேனு? அரண்டேட்டான் இனிமே எங்கேனுச்சும் அடிகிடி விழுந்திடுமோன்னு. உடனே கப்புச்சிப்புன்னு வாய் தெறக்கல்லே இளே உளுந்து கும்புட்டான் சாமி. ஏனெசமான்! இந்தப் புத்தி அந்தப் பயனுக்கு அப்பலேயே எங்ஙனேசாமி போயிருச்சு? சொல்லுங்கையா. இதுதான் ஏன்கதை. இனி நீங்கதான் ஞாயஞ்சொல்லணும்.

தங். குட்டிச்செவத்துலே முட்டிக்க வெள்ளெழுத்தா? நீசரியானகாரியம் செய்தே. அவன் கிடக்கிறான் முட்டாள். இந்தா நீ நரிமூஞ்சிலெ முளிச்சே—பிடி பணம்

[அரை ரூபாய் புதுக் காலணுக்களாகத் தருகிறான்]

நல். அப்பம்மார்களே! கும்புட்ரேன். என் ஞாவக மிருக்கட்டும் அய்புட்டும்! பவுங்காசுகளாக் குடுத்தீங்களே எங்கப்பா! இதை ஒத்தருக்கும் காட்டப்படாது. சனுக்காருக்குத் தெரிஞ்சாக் கேட்டுடுவாங்க.

[கும்பிட்டுச் செல்கிறான்.]

(காட்சி முடிகிறது.)

நாடகம் முற்றிற்று.

விடுகதை வினு.

அக்கரம் மூன்றில் ஓர்புனல். பவம்அஃதே
தகற்றிடும். அதிற்கடை யகன்றால்,
தக்கதொல் லடியார்க் குரியதொன் றாகும்.
சார்ந்திடு நடுவெழுத் தின்றேல்
முக்கிய முதன்மை வள்ளலின் பெயராம்.
முதல்அகன் றிடில்அது சேணம்.
மிக்கசெந் தமிழோர் மனஇருள் கடிந்து
மிளிர்விவே கோதயம்! ஈதென்?.

ப. க. வீரப்பமுதலியார், உன்னியூர்.

விநோதக் கூற்று.

1—பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்.—எல்லோரும் கற்பலகையைத் தொங்கவிடுங்கள், "மூன்று" என்று சொன்னதும் பதில் எழுதத் தொடங்குங்கள். எழுதினவர்கள் கற்பலகையைக் கீழே போட்டு இடத்தில் பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டும். "போடுக" என்றவுடன் யாவரும் கற்பலகைகளைக் கீழே வைத்துவிட வேண்டும். கவனியுங்கள்:—நீர் வாழும் பிராணிகளில் பத்து எழுதுக. ஒன்று—இரண்டு—மூன்று.

பலபிள்ளைகள் தமக்கு ஞாபகத்திற்கு வந்த சில நீர்ப் பிராணிகளின் பெயரை எழுதி விட்டுப் பிறவற்றைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கின்றனர். ஒருவன் மட்டும அதி விரைவில் ஏதோ எழுதிக் கற்பலகையைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்திருக்கிறான். "போடுக" என்றதும் பிள்ளைகள் யாவரும் கற்பலகையைக் கீழே வைக்கின்றனர்.

இன்ஸ்பெக்டர்.—(முதலில் கற்பலகை வைத்தவனை நோக்கி) நீ எழுதியுள்ளதை வாசி.

பையன்—நான்கு மீன், மூன்று முதலை, இரண்டு தவளை, ஒரு திமிங்கலம், ஆகப் பத்து.

கோபாலன்.

2—பிரசங்கியார்.—குடியினும் கொடிய தொன்றில்லை. பீர், ஒயின், ஜின், விஸ்கி, பிராந்தி முதலியன புட்டி புட்டியாக வாங்கி வைத்திருக்கும் என் அருமைச் சகோதரர்களே! பொருள் நஷ்டத்தைப் பொருட் படுத்தாமல் உங்களிடத்துள்ள எல்லாக் குப்பிகளையும் எறியுங்கள் கடலிலே. கொஞ்சமும் யோசியாதேயுங்கள்—.

அண்ணுச்சாமி.—அதான் சரி. அதான் சரி. கவனியுங்க. கவனியுங்க. எல்லாருங் கேளுங்க.

சுந்தரராஜு.—அண்ணுச்சாமி! முழுக் குடிகாரனுச்சே நீ. ஏது உனக்குக்கூட இவ்வளவு ஆவேசம்? உன் மனம் கூடத் திரும்பி விட்டதே! இனி ஊருக்கே நல்ல காலந்தான்.

அண்ணுச்சாமி.—நானென்ன முட்டாப்பயன்னு நெனச்சியோ? எந்தத் தண்ணியா இருக்கட்டும் எம்புட்டு ஆளமாத்தான் இருக்கட்டுமே. எறிஞ்ச குப்பிகளை அப்படியே கொண்டாந்துட மாட்டேன்?

கிருஷ்ணன்.

தமிழ்ச் சிறப்பு.

ஏற்றுநீர் ஞாலத்துற்ற நாடுகள் பலவற்றுள்ளும், யாவரானும் நன்கு மதிக்கப்பெற்று, மிகவும் கண்ணியம் வாய்ந்துள்ள நன்னாடு; நம் சீர்பெறு செந்தமிழ் நாடேயாம்.

ஏன் அங்ஙனம் இத்துணைப் பெருமையெனின் கூறுதும்: தெய்வபக்தியும், ஆசாரசீலமும் நாகரீகமும் பெருகி நின்றது அந் நாடு. ஆரியமொழிந்த பிறபாஷைகள் போலாது, தன்பலங்கொண்டே ஜ்வலித்துக்கொண்டிருக்கும் தமிழ்ப்பாஷாஞான அமைவு முற்றியது இந் நாடு.

பிறிதொன்றன் கலப்பில்லாது ஒரு தனிப்பொருளாய்ச் சிறப்புற்றோங்கி நற்சுவைபெருக்கிடும் இச் செந்தமிழ்மொழி, நம் நாட்டார் ஒவ்வொருவரானும் போற்றற்பாலதாகும். தொல்காப்பியம் முதலாய இலக்கணங்களையும்; தேவாரம், திருவாசகம், திருக்குறள் நாலடியார், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலாய இலக்கியங்களையும் நன்கு ஆராய்வார்க்கு அருந் தமிழ், இன்றமிழ், ஒண்டமிழ், செந்தமிழ், திருந்தமிழ், பசுந்தமிழ், மாண்டமிழ், வண்டமிழ் எனப் போற்றப்பெறும் நம் தமிழின் பெருமையும அன்னதற்கிட்ட அடைமொழித் தகுதியும் இனிது விளங்கும். 'இனிமை' என்னும் பொருளில் வந்த நம் தமிழ்மொழிப் பெருமை, இனிது. இனிது, சாலவு மினிது.

வெஞ்சினம் விளைக்கும் கடுஞ்சொற்றொடரில்லாமல், இன்கனியொப்ப அமைந்ததானும், கஷ்டமொரு சிறிதுமின்றி எளிதில் உச்சரிக்கத் தகுந்தமையானும் மயங்கக் கூறுதலில்லா அமைவானும், எளிய நடையுடைய அக்ஷர அமைவானும் இது ஒரு சிறப்புடைய பாஷையே என்று துணிந்து கூறலாம். உள்ளபடியே இதன் சிறப்பை எவரானும அளவிட்டுக்கூற இயலாது.

இத்துணைச் சிறப்புவாய்ந்துள நம் தமிழினைச் சேர, சோழ, பாண்டியராதிய மன்னர்பெருமக்களும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், முதலான நம் சமயகுரவரும்; கம்பர், ஒட்டக்கூத்தர்

புகழேந்தி, ஔவை முதலாய புலவர் பெருமக்களும்; பிறரும் பெரிதும் இனிது போற்றிவந்தனர். இன்னோரன்ன முன்னோராலாகிய நூல்களே இதற்குப்போதிய சான்றாம். எல்லாம் வல்ல இறைதிருவருளால் நடைபெற்றுவந்த தலைச்சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் ஆகிய இம் மூன்றும் அமிழ்தினுமினிய நம் செந்தமிழினை எவ்வளவு சிறப்புறச்செய்தன!

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
யுண்ட பாலனை யழைத்ததும், எலும்புபெண் ணுருவாக்
கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும்,

ஆனகன்னித் தண்டமிழ்ச்சொல்லின் பெருமையினைச் செப்பும் திறமுடையோம் யாமோ?

இயல், இசை, நாடகம், எனும் மூவியல் பொருந்திய நந்தமிழ்மொழி குணகடல், குமரி, குடகம், வேங்கடம், எனுமிந் நான்கெல்லையுள்ளடங்கும் தென்னாட்டிலும், பிறவிடங்களிலும் வழங்கிவருவதும், அதன் தற்கால நிலையும் நாம் நன்குணர்வோம். பாஷாபிமானமிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும், தம் தாய்பாஷையாம் இத்தமிழ்மொழி, பெரிதும் தழைவுறும்வண்ணம் அதனை இனிதுபோற்றி நற்பயனெய்துவாராக. இதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிக.

செ. பகவதியானந்தம்,
தூற்றுக்குடி.

ரத்நாவதி.

அயோத்தியில், வீரகேது என்ற அரசன் ஆட்சிசெய்கையில், ரத்நதத்தன் என்ற வியாபாரி இருந்தான். அவனுக்கு ரத்நாவதி என்ற அழகுள்ள ஒரே பெண் உண்டு. அவள் யௌவன முற்றதும், அரசர்களிலும் கோடீசுவரர்களிலும் பலர் அவளைமணக்க விரும்பினர். ஆயினும் அவள்மனம் ஒருவர்மீதும் செல்லவில்லை. 'விவாகம்' என்ற வார்த்தையைக் கேட்டதும், அவளுக்கு இருந்த வெறுப்பைக் கண்டு தந்தை மிக வருத்தமுற்றான். இவ் விஷயம் அயோத்தி முழுதும் பரவிற்று.

இங்ஙனமிருக்க, ஒருநாள் நகரமாக்கள் வீரகேதுவிடம் சென்று, "அரசே! சாதுரியத் திருடனொருவன், தனதாட்களுடன்

நாடோறும்வந்து, எங்கள் பொருள்களைக் கொள்ளையிட்டுச் செல்லுகின்றான்.. எவ்வளவு முயன்றும் அவனைக் கண்டுபிடிக்க எங்களால் முடியவில்லை'' என ஏங்கிக் கூறினர். கள்வனைக் கண்டுபிடிக்க அரசன் நகரமுழுவதும் ஆட்கள் பலரை அனுப்பினான். அவர்கள் முயற்சியும் வீணாகவே, அரசனுக்கு வெகு கோபம் வந்துவிட்டது. தானே இரவில் ஆயுதந்தரித்தும் மாறுவேடம் பூண்டும் கள்வனை அரசன் தேடிச்சென்றான். போகும்பொழுதே ''எவ்வாறேனும் இக் கள்வனைக் கண்டுபிடித்துக் கழுவிலேற்றி அவன் உயிரை யான் மாய்க்காவிடின், எல்லாம் வல்ல இறைவன்மேல் ஆணை. யான் என் உயிரை மாய்த்தே கொள்வேன்'' என்று கடுஞ்சபதம் செய்து கொண்டு சென்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம், ஓரிடத்தில் சத்தமின்றி நடந்தும் அடிக்கடிப் பின்பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டும் வந்த ஒருவனைக் கண்டு, அவனது செய்கைகள் பலவற்றால் அவன் கள்ளனே என உணர்ந்தான். தன் காரியத்தை முடித்துக்கொண்டதும், தனது கொள்ளைப்பொருளுடன் கள்வன் தனது இருப்பிடம்நோக்கிச் செல்லலானான்.. அரசன் அவனை அறியாமலே அவனது அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றான். வெகுதொலையிலுள்ள ஓர் தனியிடத்தில் கடைசியில் கள்ளன் நுழைந்ததை அரசன் கண்டனன். உடனே அவன் தனது அரண்மனைக்கு வந்து, தன் படைகளுடன் அவ்விடத்தைச் சூழ்ந்துகொண்டு கள்ளர்கூட்டத்தை வதைத்து, பெருந்தீங்கிழைத்த அவர்கள் தலைவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கழுவி லேற்றுமாறு கட்டளையிட்டான். மறுநாள் அவனைக் கொலைக்களத்திற் கிட்டுச் செல்லும்போது, விவாகத்தை வெறுத்த ரத்நாவதி, அவனைத் தன் வீட்டு உப்பரிகையி லிருந்தவாறே கண்டாள். கண்டதும், அவன்மீது கடுங்காதல் கொண்டாள் உடனே தந்தையினிடம் ஓடி, ''இக் கள்வனே என் கணவன்; இவனுயிரை எவ்வாறேனும் காத்து எனக்கு மணம் செய்வியாவிடில் இவன் பிராணன்போன மறுநிமிடமே என்பிராணனும் போகும்'' என்று கதறினாள்.

இதுகேட்ட தந்தை, ''இவனை மீட்க முடியாது. இவன் கொலையும் கொள்ளையும் செய்த திருடன். நீ இங்ஙனம் பேசுவது தகாது''

னை அதட்டினுன். ஆயினும் தான்கொண்ட பிடிவாதத்தை அவள் விடவில்லை. ஆகவே, புத்திரி வாஞ்சையுள்ள அவ் வியாபாரி, அரசனுக்குத் தன் பொருள் முழுதையும் அளித்து, கள்வனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டான். ஆனல் அரசன் "எனது உயிரைப் பந்தயம் வைத்துவிட்டேன்; அவன் இறவாவிடில், நான் இறப்பேன். ஆகலின் இக்கள்வனை விடமுடியாது" என்று கூறினன். தங்கையின் முயற்சி வீணனதுகண்டு, கொலைக்களத்துக்கு ஓடினள் ரத்நாவதி அதற்குள் கள்வனது உயிர் மாய்க்கப்பட்டது அக்கள்வன் தான் இறக்குமுன் ரத்நாவதியின் வரலாற்றை ஜனங்கள்மூலமாக அறிந்து, "அந்தோ! என் உயிரைக் காப்பாற்ற முன்வந்த இவ் வியாபாரிக்கு நான் நன்றி காட்ட முடியவில்லையே" என்று அழுதான். பின்பு பேரழகு வாய்ந்த இப் பெண் அரசனையும் வெறுத்து, சேவலம் குரூபியும் கள்வனுமாகிய என்னிடம் ஏன் காதல்கொண்டாள்? மகளிர் மனம் அதி அற்புதமானது" என்று நினைத்துச் சிரித்துக்கொண்டே உயிரை விட்டான்.

ஓடோடியும்வந்த ரத்நாவதி கள்வனைக் கட்டிக்கொண்டழுது, பின் சிதையிலேறலானுள். அப்பொழுது, ஆகாசவாணி "பதிவிரதே! நீ, தானாகவே வரித்த கணவனிடம் வைத்துள்ள பக்திக்கு மெச்சினேன். உனக்கு வேண்டும் வரம் கேள்" என்ன, அப்பெண் வணங்கி, "எனது பிரிவினுல் வருந்தும் என் தங்கைக்கு ஆறுதலாமாறு புத்திரப்பேறு அளித்திடுக" என வேண்டினுள். ஆகாசவாணி "பெண்ணே! அங்ஙனமே ஆகுக. வேறு வரமும் கேள்" என்ன, அவள், "எனது இக்கணவன் உயிர் பிழைக்கவும், இனி நல்லொழுக்கம் ஒன்றையே மேற்கொள்ளவும் அருள்புரிக" என்றனள் அசரீரி, "அவ்வாறே ஆகுக. மன்னன் வீரகேதுவும் மகிழ்ச்சியுறுக" எனறது. உடனே கள்வன் உயிர்பெற்று அழகுடன் விளங்கினுன் ரத்நதத்தன் ஆச்சரியமும் மகிழ்வும் எய்திக் கள்வனையும் அழைத்துச் சென்று ஓர் சுப முகூர்த்தத்தில் ரத்நாவதியை அவனுக்கு மணம் புரிவித்தான். கள்வன் நல்வழிப்பட்டதை அறிந்த அரசன், அவனை வரவழைத்து, முக்கிய சேனபதி உத்தியோகங் கொடுத்தான் ரத்நதத்தனும் ரத்நாவதியும் வெகுகாலம் புத்திர மித்திர பௌத்திரர்களுடன் சுகமாக வாழ்ந்தனர் —எம். எம் நாராயணசாமி ஐயர்.

கமலாவதி.

—:o:—

அங்கம்-5.

காட்சி-1.

இடம்:—மாளவநாட்டரமனைச் சபாமண்டபம். காலம்:—முற்பகல்.

[ஜயகேசரி, விக்கிரமகேது, சத்தியானந்தன் முதலியோர் ஒருபுறமும்; கமலாவதி, குணமாலிகை, மோகனு முதலியோர் ஒருபுறமும் அமர்ந்திருக்கின்றார்கள்.]

விக். (ஜயகேசரியை நோக்கி) ஜயகேசரி! உலகில் நண்பர்கள் என்றால் உன்னையும் ஸ்ரீதரனையும் போல் இருத்தல் வேண்டும். பெருந்தன்மையும் வலிமையும் வாய்ந்த உன் தந்தையை நான் முன் கொன்றதை எண்ணுந்தோறும், என் மனம் வருந்துகின்றது.

ஜய. ஐய! இதென்ன? தாங்கள் என்ன செய்வீர்கள்? அது என் விதி. கற்றோர் முற்றோன்று கழிவிரக்கம். சென்ற யாவையும் மறந்து, இனி நாம் ஒருமனப்பட்டு யாவர்க்கும் நல்லோராய் வாழ இறைவன் திருவருள் புரிக.

விக். என் பிரார்த்தனையும் இதுவே—இருக்கட்டும், ஸ்ரீதரன் எங்கே? வசந்தசேன மகாராஜா அவர்கள் நம்மை இங்கு வரச்செய்த காரணம் எதுவாக இருக்கலாம்?

ஜய. நானும் ஸ்ரீதரனைக் கண்டு சில விஷயங்கள் அவரிடமிருந்து அறிய வேண்டுமென்ற ஆவலுடன் இருக்கிறேன். அது சம்பந்தமாகத்தான் அவர் தந்தையுடன் பேசிக்கொண்டிருக்கிறார் போலும். ஒருவேளை மகாராஜாவும் அதன்பொருட்டே இங்கு நம்மை வரச்சொல்லி யிருக்கலாமோ?

மூக். 'அதன் பொருட்டே' என்றாயே? எதன்பொருட்டு? உனக்கு ஏதோ தெரியும்போ லிருக்கிறதே, என்ன விசேஷம்?

ஐய. அரைகுறையாக அறிந்ததை நான் எங்ஙனம் அறிவிப்பது? எதற்கும் ஸ்ரீதரர் வந்துவிட்டால் நலமென எண்ணுகிறேன். [ஸ்ரீதரன் வருகிறான்.]

நல்லவேளை அவரும் அதோ வந்துவிட்டார்.

விக். ஸ்ரீதர! என்ன விசேஷம்? தந்தையார் உடம்பு எப்படி? அவர் திடீரென நம்மை இங்கு வரச்செய்ததன் நோக்கம் என்ன? உனக்குத் தெரியுமா!

ஸ்ரீதர. ஐய! என் தந்தையார் முற்றிலும் குணமடைந்துவிட்டார். ஆயினும் அதிக துர்ப்பலமாக இருக்கிறார். நீங்கள் அறிய விரும்பும் விஷயம் அவரே சின்னாழிகையில் இங்கு வந்து அறிவிக்கக்கூடும்.

[வசந்தசேனன் வருகிறான் யாவரும் எழுகின்றனர்.]

ஆ! அவர்க்கே இருப்புக்கொள்ளவில்லை போலும்! சொல்லி வாய் மூடுமுன் வந்துவிட்டாரே!

விக். வாருங்கள்! வாருங்கள்!! தங்களுக்கு வயது நூறு. ஆ! ஆ! என்ன பலவீனம்! எப்படி யிருந்த உடம்பு எப்படிப்போய் விட்டது?

[அரசனும் யாவரும் உட்காருகின்றனர்.]

சத். தடையென்ன? வயது நூறுதலின்தான், மகத்தான கண்டத்தினின்றும் அவர் பிழைத்துளார். குழந்தைகளின் கல்யாணத்தைக் கூடிய சீக்கிரத்தில் கண்டுகளிக்கவும் போகிறார்.

வச. (புன்சிரிப்புடன் யாவரையும் நோக்கி), உங்களை நான் வரவழைத்ததற்குக் காரணம் ஒரு முக்கிய விஷயம்பற்றி யோசிக்கவே. அதை நான் கூறத் தொடங்குமுன் நம் சத்தியவாகந்தர் தற்செயலாய்த் தம்மை யறியாமலே வெளியிட்டு விட்டார்.

விக். அப்படியா? குழந்தைகளின் கல்யாணம் பற்றித்தானா? நினைத்தேன் — நினைத்ததை நிறைவேற்றுவதில் தடையென்ன? "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" இவர்களது பரஸ்பரக் காதல் நாம் அறிந்ததே.

ஒரு நன்னாள் குறித்துக் கல்யாணத்திற்கு ஏற்பாடுசெய்து விடுவோம். (ஸ்ரீதரனை நோக்கி) என்னப்பா ஸ்ரீதர! சரி தானே?

[கமலாவதியும் ஸ்ரீதரனும் ஒருவரையொருவர் கடைக்கண்ணாற் பார்த்துப் புன்முறுவல் செய்கின்றனர்.]

ஸ்ரீ. எந்தைக்கும் தங்கட்கும் எது வுடன்பாடோ அதுஎனக்கும் உடன்பாடே.

[வசந்தசேனனை நோக்கி]

எந்தாய்! குழந்தை குணமாலிகையின் விவாக விஷயமாகத் தாங்கள் செய்துள்ள தீர்மானம் என்ன? ஜயசேகரிக்குத் தானே அவள்? அவள் கல்யாணத்தையும்—

வச. ஏன்? இருவரும் சரியான தம்பதிகளே. நம் கமலாவதியின் உயிரையும் மானத்தையும் காப்பாற்றியவன் அன்றோ ஜயசேகரி? அவனில்லாவிடில் கோரசேனன் கையிலகப்பட்ட அவள் தப்பியிருக்க முடியுமா?

விக்ர. குணமாலிகையால்தான் நமது மோகனராணியார் கோரசேனனது கொடுமையை உணர்ந்ததும் நல்வழிப்பட்டதும். ஆகையால் மதியூகிகளாகிய அவ்விருவரும் வதூவரர் ஆதற்குரியரே. இதில் தடை என்ன?

வச. ஜயசேகரிக்கே குணமாலிகையைக் கொடுக்க மோஹனுவின் மனமும் திரும்பிவிட்டது. ஆகலால் இனி ஒருதடையுமில்லை.—ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்: இன்றிருப்பவர்கள் நாளை இவ்வுலகில் இருப்பாரென்றெண்ணுதற்கில்லை. ஆதலின் நான் கண்மூடுமுன் சீக்கிரம் விவாக காரியங்களை நிறைவேற்றிவிடுதல் நலம். யாரங்கே சேவகன்?

[சேவகன் வருகிறான்]

நீ உடனே சென்று நம் புரோகிதரை அழைத்து வா.

[சேவகன் செல்கிறான்]

விக்ர. அரசே! "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதும், "எதுவும் அவன் திருச்சித்தத்தின்படியேதான் நடக்கும்" என்பதும் எவ்வளவு உண்மை!

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

என்றதன் பொருத்தத்தை விளக்க நம் ஜீவிய சரித்திரம் ஒன்றே போதுமான தன்றோ?

[புரோகிதர் வருகிறார்]

புரோ. (வசந்தசேனனை நோக்கி) ஜயவிஜயீபவ! சார்வபௌம! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. என்ன விசேஷம்?

வச. நம் குழந்தைகளுக்கு விவாகம் நடத்த உத்தேசம். வதூவரர்களின ஜாதகங்கள் இவை. நல்நாள் குறித்துச் சொல்லுங்கள். ஜாதகங்கள் பொருந்தியிருக்கின்றனவா என்பதையும் கவனித்துக் கூறுங்கள்.

புரோ. உத்தரவு. (ஜாதகங்களைப் படித்து விரல்களை எண்ணிக் கணக்கிட்டு) பேஷ்! பேஷ்!! யோக ஜாதகங்கள் இவை. எவ்வளவு பொருத்தம்! அரசே! நல்லதுக்கு நானூறு விக்கினம் என்பார். உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். தம்பதிகளாகப்போகிற இருவருக்கும் இன்றைய தினமே மணநாளாக அமைந்துள்ளதே! என்ன ஆச்சரியம்! எல்லாம் ஈசன்செயல் பாருங்கள். (மற்றும் யோசித்து) லக்கினமும் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது. இன்னும் ஒரு நாழிகைக்கெல்லாம் நன்முகூர்த்தம் உளது. "சுபஸ்ய சீக்ரம்" ஆகலின் விவாக மஹோத்ஸவத்திற்குத் தங்கட்குப் பிரியமாயின் இந்நிமிஷமே தொடங்கலாம்.

வச. (சந்தோஷங்கொண்டு எல்லோரையும் பார்த்து) அங்ஙனமாயின் நாம் கருதியதை இப்பொழுதே நிறைவேற்றிவிட்டால் தானென்ன?

யாவரும். மகாராஜாவின் திருச்சித்தத்தின்படியே நடக்கட்டும்.

வச. யாரடா சேவகன்? கொண்டுவா மாலைகள். சீக்கிரம் போ.

[சேவகன் சென்றதும் யாவரையும் நோக்கி]

எனக்கு இன்னொரு விருப்பமும் உளது: எனக்குத் தேகம் பலவீனப்பட்டு விட்டதால் இனி நெடுநாள் நான் ராஜ்ய பாரம் வகிக்க இயலாது. ஸ்ரீதரனது மகுடாபிஷேகத்தையும் விரைவினில் நிறைவேற்ற வேண்டுமென்பதே என் ஆவல்.

ஸ்ரீ தந்தாய்! என் மகுடாபிஷேகம் பற்றிய கவலை இப்போழுது தங்களுக்கு வேண்டுவதில்லை. இன்னும் பலவருஷம் அரோக திடகாத்திரராகத் தாங்களே ஆட்சிபுரியக் கடவுள் கருணை புரிவார்.

விக்ர. ஸ்ரீதர! நன்றுகூறினை. அதுதான் சரி—உனக்கு இன்னொரு ராஜ்யமும் இருக்கிறது: எனக்கு இருப்பது ஒரே குழந்தை. ஆதலின் எனக்குப் பிற்காலம் என் கமலாவதியின் கேகய நாடும் நின்னதே. நீ அரசனாகுங் காலத்தில்—நமது ஜய கேசரியை—ஈதென்ன பேதைமை!—உனக்குத் தெரியாதா?

ஸ்ரீ அவன்தான், அப்பொழுது எனக்கு முக்கிய மந்திரியாகப் போகிறவன். அதில் என்ன சந்தேகம். ஜயகேசரி, ஜயகேசரியேயன்றோ?

வச. எல்லாம் இனிது நிறைவேற இறைவன் திருவருள்புரிக. (சேவகனை நோக்கி) எங்கடா மாலை?

(சேவகன் மாலையை ஏந்தி நிற்கிறான்]

விக்ர. (கமலாவதியின் கையை ஸ்ரீதரனது கைமீது வைத்து) ஸ்ரீதர! கமலாவதியை ஏற்றுக்கொள்.

[யாவரும் ஆர்ப்பரிக்க, தம்பதிகள் மாலை மாற்றிக்கொள்கின்றனர்]

வச (குணமாலிகையின் கையை ஜயகேசரி கைமீது வைத்து) ஜயகேசரி! குணமாலிகையை ஏற்றுக்கொள்.

[யாவரும் ஆர்ப்பரிக்க, தம்பதிகள் மாலை மாற்றிக்கொள்கின்றனர்]

(காட்சி முடிகின்றது.)

கமலாவதி முற்றிற்று

K. வேங்கடராமையர்.

4. "மெய்த்திருவந் தற்றும் வெந்துயர்வந் தற்றும் வேறுறாமல்
ஒத்திருக்கு முள்ளமுடை யுரவோனே!" இதுகாறும் உன்பால் முன்வா
சித்தசிலர் மன இருளை நீக்கியநீ, இனிநம்பத் திரிகையாலே
நத்துபல *நகரத்தார் மனவிருளை நனிநீக்கல் ஞாயம் தானே?

* நகரத்தார்—குடிகள், ஊரார், அல்லது நாட்டுக்கோட்டையார்.

5. "குலனருள்தெய் வம்கொள்கை மேன்மைகலை பயில்தெளிவு" கொண்டு யார்க்கும்
நலனுறச்செய் சாமிநா தப்பெயர்கொள் நான்மறையோய்! நன்னூ லார்முன்
புலமை மிகும் ஆசிரியர் 'நூலுரைபோ தகர்' என்னப் புகன்றார். நீயோ,
இலகிடுமிம் மூவருநற் பத்திரிகா சிரியனும். நின் இசைதான் என்னே?

6. பரிவொடுமுப் பதுவருடம் பல்லவர்க்கும் உரியகலை பயிற்றி வந்த
பிரியமிகு நின்னைஇனிப் பிரியமன்ம் வருந்துகிறோம் பெரிதும் யாங்கள்.
புரவலரும் பொதுஜனரும் *தாவலரும் இரவலரும் பொருந்தி-வாழ்தற்
குரியதொழிற் புக்கனைநின் பொருள்வருவாய் மிக்கதென உவக்கின் றேமால்.

* தாவலர்—கொடையாளிகள்.

7. ஈசனையே நின்றுதமிழ்ப் பாச்சொலச்செய் நம்மதுரை இயல்பை நோக்கி
வாசனையார் தமிழ்ப்பாண்டித் துரைநிறுவு தமிழ்ச்சங்கம் வந்த தற்குன்
யோசனையே மூலம். இனி நினைப்புகழேன்: மிக்கமதி யூகி யேனும்
"நேசனைக்கா ணுவிடத்தே நெஞ்சார வேதுதித்தல்" நேர்மை யாமால்,

8. தேங்கமழும் மாமலர்கள் சேய்மையினும் நறுமணமே
திகழ வீசும்.
ஆங்கதுபோல் ஆங்கிலம்சேர் தமிழ்நல்லா ரியவறிவால்
ஆன்றோ ராகிப்
பாங்குபெறப் பாலருக்கும் பாமரர்க்கும் பண்டிதர்க்கும்
பயனை செய்நீ,
யாங்கிருந்தென்? நினதுதவி யாம்பெறுவோம். நினை மற
யாண்டும் வாழி. [வோம்.

9. சூழிசைசேர் பெருந்தகையாய்! நினைப்பிரிய யாமுற்றோம்
துயர்.என் றாலும்,
பாழியகற் பயனூர்ந்த ஸ்ரீராமா யணக்கதையில்
பண்டோர் நாளில்,
ஆழிமிகப் பிரிவுதுயர் அகற்றியஉண் மையை யறிந்தோம்.
அதனால் இன்றோர்
ஆழ்ந்திருக் கின்றோம் "நீவாழிய, பல் லூழி நனி
ஐய!" வென்றே.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்ராஸநாதிபதி.

சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(328-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஒல்லாதான் இட்ட உணவிற்காச் சல்லியனார்
வல்லதுணை ஆயதென்னோ? வள்ளுவரே!—சொல்லின்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்தெரி வார். (௪)

(அ-ம் முதலியன) :—ஒல்லாதான்—பகைவன் (ஆகிய துர்யோதனன்); சல்லியன்—மாத்திரியின் சகோதரன்; வல்ல—பலமிக்க; பயன் தெரிவார்—உதவியின் பயனை உள்ளபடி உணர்ந்தறிந்தவர்கள்.

துர்யோதனனுக்குச் சல்லியன் துணையானது :—பாண்டவர்கட்குரிய தாயபாகத்தைக் கௌரவர் தர மறுத்ததன் நிமித்தம், அவ்விரு திறத்தாருக்கும் குருக்ஷேத்திரத்தில் கடும்போர் நிகழ்ந்த விஷயம் பாரதம் படித்

தோர் அறிவர். யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன், அவர்கள், தத்தம் உறவினர்க்கும் நண்பர்க்கும் ஓலை போக்கிப் படைத்துணை வேண்டினர். இவ்வோலை பெற்றதும், மாத்திரியின் சகோதரனும் நகுல சகாதேவர்த் மாமனுமாகிய சல்லியன், தன் சேனைகளுடனும், தனக்குக் கீழ்ப்பட்ட பல அரசர்களுடனும், அவர்களது சைநியங்களுடனும், தனது மருமக்களான பாண்டவர்க்கு உதவி செய்யுமாறு தன் நாட்டைவிட்டுப் புறப்பட்டான். இச் சல்லியன் சத்தியசீலன் என்பதை நன்குணர்ந்த தூர்யோதனன், அவனையும் அவனது வலிமிக்க சேனையையும் வஞ்சனையால் தனக்கு உதவியாக்கிக் கொள்ள ஓர் சூழ்ச்சி செய்தான்: சல்லியன் வரும்வழியில் ஆங்காங்கு உணவுப்பொருள்களடங்கிய விடுதிகளும் தண்ணீர்ப்பந்தல்களும் அமைத்தான். இங்ஙனம் தான் அமைத்த விடுதிகள் தருமன் அமைத்தவை என்று பொய் விளம்பரம் செய்தான். கல்வரையும், பாலைக் கடுஞ்சுரமும் கடந்து வந்த சல்லியனும், அவன் கீழ்ப்படைகளும், கடு வெயில் பொறாது, பசி தாகத்தால் களைத்து மிக வருந்தி நிற்கையில், துர்யோதனனால் ஏவப்பட்டிருந்த சிலர் ஓடி வந்து சல்லியனை நோக்கி "ஐயா! நீயும் நின் படையும் வருந்துதல் ஏனோ? அதி சமீபத்தில் நின் மருமகன் தருமபுத்திரனது சத்திரம் உளதே. நினது நல்வரவை எதிர்பார்த்தே அவன் நினக்கும் நினது பெரும்படைகட்கும் வேண்டிய சகல வசதிகளும் செய்துவைத்துளன். ஆதலின் அங்கடைந்து உண்டு பசியும் களைப்பும் ஆறி, நீவிர் யாவரும் செல்லலாமே" என்றனன். இச்சுப செய்தி கேட்டதும், சல்லியன் மகிழ்வுற்று, யாவருடனும் ஒற்றர் காட்டிய சத்திரத்திற் றங்கிச் சம்பிரமமாக உண்டு களைப்பும் இளைப்பும் ஆறினன். பிறகு சல்லியன், ஆபத்து வேளையில் தானும் தன் வீரப்படைகளும் உற்ற பேருதவியை நினைந்து, "ஆ! ஆ!! உற்றுழி உதவிய நம் மகோபகாரிக்கு நம் உயிரைக்கொடுப்பது பெரிய காரியமன்றே?" என்று சுற்றிலு முள்ளோரை நோக்கி வியந்து கூறினன். பக்கத்து அறையில் மறைவாக இருந்த துர்யோதனன் இம்மொழி கேட்டதும் வெளிவந்து, சல்லியனை வணங்கித் தனக்கு உதவிபுரியுமாறு அவனை வேண்டினன். வேண்டலும், சல்லியன், "உனக்கு உதவி செய்ய என்னால் முடியாது. ஏனெனில்

முன்னொருவன் செய்யும் உதவிக்கு மூவுலகம்
தன்னைக் கொடுத்தாலும் சாலுமோ?—கொன்னே
உயிர்க்(கு) உறுதியாக ஒருவர்சோ(று) உண்டால்
பிறர்க்(கு) உரியர் ஆவரோ? பேசு.

ஆதலின், யானும் என் சேனைகளும் நாங்கள் உயிரிழக்கும் தறுவாயில் உணவாதிய அளித்த மகோபகாரியின் பொருட்டே உயிர் விடுவேம். உன் வேண்டுகோட்கிணங்க இயலாமைக்கு விசனிக்கிறேன்" என்றனன். சல்லியன் இவ்வாறு கூறத் துரியோதனன், "மாமா! உணவளித்தோர் பொருட்டு நீயும் நின் படையும் உயிர் விடுதல் என்பது உறுதி தானோ?" என்று நிராசை கொண்டவன்போல் அபிநயித்துக்கேட்கக் கள்ளங்கபடு அறியாத சல்லியன், "ஆம், சத்தியம். முக்காலும் சத்தியம்: உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. ஒருவர் சோறுண்டபின் ஒருவர்க்கா நிற்போர் அருநரகில் வீழ்வார்கள் அன்றோ? இதுகூட அறியாத மூடனோ யான்?" என வெகுண்டு கூறினன்.

உடனே துரியோதனன் முகமலர்ச்சி கொண்டவனாகி "அம்மான்! நீ சத்தியசீலன்: வான் மாறினும் நின் மொழி மாறாது. உணவளித்தோர்க்கர்கவே நீயும் நின் படையும் உயிர்விடுதலே கடன். உணவளித்தவன் யானே. தருமன் அல்லன். என் சோறுண்ட நீ எனக்கே உதவி செய்வாய் என்பதில் ஐயமில்லை. நின் பேருதவிக்கு வந்தனம்" என்றான். இம்மொழி கேட்டதும், சல்லியன் துர்யோதனனை நோக்கி " ஆ! பாவி! வஞ்சக!

தஞ்சமெனஒருவன் சோறுண்ட தாளாண்மை
வெஞ்சமரி லன்றி மடிவரோ?—தஞ்சம்
அவர்க்காக வந்தேன் அரவுயர்த்தாய்! மீட்டாய்
நமக்காம் ஆ(று) ஈதோ? நவில்.

என்று கடிந்துரைத்து, தன் சைனியங்களைத் துரியோதனனுடன் செல்லுமாறே அனுப்பிவிட்டுத் தருமனிடம் வந்து சேர்ந்தான். வந்ததும் நிகழ்ந்த யாவையும் கூறி, "அந்தோ" அரவுயர்த்தோன் கரவினிடம் சோற்றின் வலியால் துவக்குண்டேன்! என் செய்வேன்" என்று ஏங்கிக் கூறினான். அது கேட்ட தருமன்,

"என்னே! விதியின் வலியிருந்தவா(று)! என்று
பொன்னேர் முகம்வாடிப் "பொங்கழலான்—முன் நீபோய்
மற்றேதுஞ் சொல்லி மறுத்திடா தாங்கவற்குக்
குற்றேவ லுஞ்செய் குறித்து"

என நன்மதி கூறி அனுப்பச் சல்லியன் அஸ்தினபுரி சென்று துர்யோதனனுக்கு ஒரு பெருந்துணையாயினன்" என்பதே.

சீலக் குசேலர்தரு சிற்றுண்டி பெற்றளித்தான்
மாலும் பெருவாழ்வு வள்ளுவரே!—மேலாம்
உதவி வரைத்தன்(று) உதவி. உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (௫)

(அ-ம் முதலியன):—மால்—மகா விஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணன்; உதவி:—எதிர் செய்யும் உதவி; உதவி வரைத்தன்று—முன் செய்த உதவியளவினதில்லை; உதவி செயப்பட்டார் — அவ்வுதவியைப் பெற்றுக்கொண்டவரது; சால்பின்—தகுதியின்; வரைத்து—அளவுடையதாகும்.

குசேலனது சிற்றுண்டி பெற்று மால் பெருவாழ்வு அளித்தது—வறுமைப்பிணியால் வருந்திய காலத்தும், "ஏற்பதிகழ்ச்சி" என்பதைக்கடைப்பிடித்துச் செம்மையில் ஒழுகிய குசேலன், தனது மனைவியையும் 27 மக்களையும் காக்க வகையின்றியும், தன்பாலுற்ற அதிதிகளைத் தக்கவாறு உபசரிக்க முடியாமலும் வருந்த நேர்ந்தது. அப்பொழுது அவனது மனைவியாகிய சுசீலை, கண்ணனிடம் சென்று குறையிரக்குமாறு நன்மதி கூறினள். குசேலன் தன் மனைவி சொற்படி நடந்தால் "வர்சு தேவனது

பாதசேவையும் கிடைக்குமென எண்ணி, அதன் பொருட்டு மகிழ்ந்து, துவாரகைக்குச் செல்லச் சம்மதித்தான். பிறகு அவன் மனைவியை நோக்கி, "கடவுளர், குழந்தைகள், பெரியோர் இவர்களிடம் வெறுங்கையுடன் போகலாகாது. அவர்கட்குரியது ஏதேனும் கொண்டே போக வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனோ ராஜாதி ராஜனும் தேவாதி தேவனுமாவன். அவனுக்கேற்ற தேதேனும் உளதா? — புல் நுனியில் தங்கிய பனித்துளியால் கடல் ஒரு போதும் நிரம்பாது. அது போல் நான் தரும் காணிக்கையால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை. ஆயினும் மெய்யன்பொடு தரும் எதனையும் அவன் உவந்தேற்பன்" என்றான். உடனே அவ்வுத்தமி எங்கெங்கோ சென்று இரண்டொருபிடி அவல் இரவலாகப் பெற்றுவந்து, அதை முனிவனது கந்தையில் முடிந்து, அதன் மேல் பல கந்தைகளைச்சுற்றி வணங்கி நின்றாள். இவ்வவல் பெற்றதும், குசேலன் அதி சிரமப்பட்டு மேல் கடலையடைந்து, தோணி இயக்குவோர்க்கு இன்சொற் கூறித் துவாரகையை அடைந்து, கண்ணனது அரமனை வாயிலில் நின்று, தன் வரவை ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கடைகாவலன் மூலம் அதி சங்கோசத்துடன் அறிவித்தான். அறிவிக்கவே. ஸ்ரீ கிருஷ்ணன்,

தாயது வருகைகேட்ட தனியிளங் குழவிபோன்று
நேயமிக் குடையனாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
"போயழைத் திடுமின் இன்னே, போயழைத் திடுமின் இன்னே.
போயழைத் திடுமின் இன்னே" என்விரை பொருளிற் சொற்று,

அவனை உபசரிப்பதற் காயுனபுரிந்து, அவனை எதிர்கொண்டழைத்து, அந்தப்புரத்திற்கழைத்துச் சென்றான். பிறகு அவனுடன் அளவளாவி "மடியில் இருப்பது என்ன?" என்று கிருஷ்ணன் கேட்ப, குசேலன் வெட்கி வாய் திறவாது நின்றான். கிருஷ்ணன் அவனது அவல் மூட்டையைப் பலவந்தமாகப்பிடுங்கி அவிழ்த்து, அதில் ஒருபிடி எடுத்து உலகமுண்ட திருவாயால் உண்டு, "ஆ! ஆ!! என்னருசி! என்னருசி! இனிமை மிக்க இதனைக் கொடாதிருந்தீரல்லவா? இருக்கட்டும்" என்று இரண்டாவது பிடியையும் எடுக்கலானான். அதுகண்ட லக்ஷ்மி, "நமது நாதன் உண்ட ஒருபிடி அவலுக்கு இகத்திலும் பரத்திலுமுள்ள சகல சம்பத்துக்களும் குசேலனுக்குச் சுவாதீனமாய்விட்டன. அவர் எடுக்கும் இரண்டாவது பிடி அவலுக்கு இனி நாமல்லவோ வசியமாகவேண்டும்" என்றெண்ணி, அதனைத்தான் வாங்கிக்கொண்டனள். கண்ணனிடம் குறையிரக்கக் கூசியும், அவனது திவ்ய தரிசனத்தால் அகமகிழ்வுற்றுமிருந்த குசேலன், மறுநாள் அவனிடமிருந்து பிரியாவிடை பெற்றுத் தனதூருக்குத் திரும்பினான். திரும்பும் போதே தன்னிடத்தோர் தெய்விக மாறுதல் கண்டு வியப்புற்று வீடு செல்லலும், தன் மனைவி மக்கள், போக போக்கியங்கள் நிரம்பிய பெருமாளிகையில் இருப்பதைக்கண்டு, ஸ்ரீ கிருஷ்ணனது பெருங்கருணையை வியந்து ஈசுவரத் தியானத்தில் தன் வாழ்நாளைக்கழித்து, முடிவில் ஸ்ரீ கிருஷ்ணனால் அந்தமில் பேரின்ப வீடளிக்கப் பெற்றனன்" என்பதே.

ம. கோ.

தைப்பூசச் செய்யுட்கள்.

தென்காசி வாழும் சிவகுமரன் தண்டதரன்
றன்பால் அடையும் தவமுடையேம் ஆயினேம்.
தன்பால் அடையும் தவமுடையேம் ஆனமையால்,
அன்பாம் மதுபருகி ஆடோமோ தொண்டீர்!
ஆறுமுகன் பேர்ப்பாடி ஆடோமோ தொண்டீர்! (௧)

தண்டா யுதபாணி தன்னருட்குப் பாத்திரராய்க்
கொண்டாடி ஈங்கவனைக் கூடும் பரிசுபெற்றேம்.
கொண்டாடி ஈங்கவனைக் கூடும் பரிசுறலாற்
பண்பால் அவன்புகழைப் பாடோமோ தொண்டீர்!
பார்வதியாள் பாலனெனப் பாடோமோ தொண்டீர். (௨)

தமிழ்க்குருகி முட்டையெனத் தன்பேர் உரைத்தகுகன்
கமழ்கடம்பன் சேவடியைக் கண்டிடும் பேறுற்றேம்.
கமழ்கடம்பன் சேவடியைக் கண்டிடும்பே றுற்றமையால்
அமிழ்தூறும் பாஇசைத்திங் காடோமோ தொண்டீர்!
ஆடுமயில் வாகனனென் றாடோமோ தொண்டீர்! (௩)

வெண்பா:

சீர்பெறுதென் காசி திகழ்மாட சாமியெனும்
பேர்திகழ்பண் டாரப் பெரியோனும்—ஏர்பெறுநல்
வர்த்தகரும் வாழ்கவென மால்மருகன் தாளிணையை
நித்தநிதம் சேவிப்போம் நாம்.

— ம. கோபாலகிருஷ்ணையர்.

முக்கிய அறிவிப்பு.

இத்துடன் இரண்டாந்தொகுதி முடிவு பெறுகின்றது. நாம் கேட்டுக்கொண்டபடி மூன்றாந்தொகுதிக்கு முன்பணம் அனுப்பியோ, அதற்குரிய பணத்தை வி. பி. மூலம் அவசியம் பெறுமாறு உறுதி கூறியோ நமக்கு ஊக்க மளித்த சிலர்க்கு நன்றி கூறுகிறேம். சிலர் இச்சஞ்சிகை கிடைத்ததும் மூன்றாவது வருட சந்தாவை அனுப்பி விடுவதாக வாக்களித்துள்ளார்கள். அவர்களுக்கும் வந்தனம்.

இச்சஞ்சிகை கிடைத்த 10 தினங்களுக்குள், எல்லோரிடமிருந்தும் மூன்றாம் வருடச்சந்தாவை மணி ஆர்டர் மூலமாகவே எதிர் பார்க்கிறோம். இனமாகப் பத்திரிகை பெற்று வந்தோரும் பணம் அனுப்பாதோரும் வி. பி. யில் பத்திரிகை பெறும் கௌரவ அபிமானிகளென எண்ணி அவர்களுக்கு வி. பி. அனுப்புவோம்.

பத்திரிகை வேண்டாத நேயர்கள், வீண் செலவிற்கும் கவலைக்கும் நஷ்டத்திற்கும் எம்மை உட்படுத்தாது, தம் அபிப்பிராயத்தை அறிவித்து விட்டால் அதையே அவர்கள் செய்யும் பேருதவியாக எண்ணுவோம்.

சிலரிடமிருந்தேனும் நன்கொடைகளும், புதிய சந்தாதாரது பணமும் எதிர்பார்க்கிறோம்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.— (1) இதன் வருகிற நிர்வாக சபைக் கூட்டம் சென்னையில் நடை பெறுமாம். (2) சென்ற 5-வருஷ காலமாக இச்சங்கத்தார் நடத்தும் பால பண்டித பரீக்ஷைக்குக் கூட வந்து எழுதவேனும் முன் வந்ததாகத் தெரியவில்லை. (3) இச்சங்கக் கலாசாலையிற் பயிலும் மாணவர்கள் படிக்கவேண்டிய புஸ்தகங்களைத் தக்கவாறு தெரிந்தெடுக்குமாறு நியமிக்கப்பட்ட "வித்வக் கமிட்டி", மாதம் 7க்கு மேலாகியும் ஏதும்செய்ததாகத் தெரியவில்லை. இச்சங்க சம்பந்தமான பிறவற்றைப் பின்னர் அறிவிப்போம்.

தென்காசைத் தமிழ்ச் சங்கம்:—போடிநாயக்கனூரில் உள்ள இச்சங்கத்தாரது வேண்டுகோட்கிணங்கி, டிசம்பர் மீ 10உ யன்று ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், "தமிழ்மொழி வளர்ச்சி" என்பதைப் பற்றி ஸ்ரீ அரங்கசாமி ஐயர் எம். ஏ. எல். டி. யின் அக்ராஸநத்தின் கீழ் மகோபந்யாஸம் செய்தனர்.

போடிநாயக்கனூர் வாலிபர் சங்கம்.—இதன் வருஷோத்ஸவம், அவ்வூர் உயர்தர வித்யாசாலைத்தலைவர் ஸ்ரீ ரங்கசாமி ஐயர் எம். ஏ. எல். டி. யின் அக்ராஸநத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர் "கோபால கிருஷ்ண கோக்லே" யைப்பற்றி யாவரும் மகிழப் பிரசங்கம் செய்ததும், சில மாணவர்கள் "வெனிஸ் வர்த்தகன்" என்பதில் ஒரு காட்சி நடித்தனர்.

பத்திராதிபர்

புத்தக மதிப்புரை.

நம்மவர் நூற்றெட்டு.—திருவையாறு ஜோதிஷ தந்திரசபை ஸ்தாபகரும், பிரமசம்ஹிதை, ஜினேந்திரமாலை முதலிய அரிய ஜோதிட நூற்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவருமாகிய ஸ்ரீ என். சிதம்பரைய பீ. ஏ. எப். டி. எஸ். இயற்றிய ஓர் அழகிய சிறு நூலின் மூன்றாம் பதிப்பு பிரதி ஒன்று பெற்றோம். மேனாட்டு நாகரிகத்தாலும், ஆசாரத்தாலும் அந்தணரிற் பலருற்ற சீர்கேட்டை இனிய எளிய 108 வெண்பாக்களாற் கூறுவதால் இதற்கு "நம்மவர் நூற்றெட்டு"என்ற பெயர் இடப்பட்டதாகும். லௌகிகர் சம்பந்தமாக: "வீணர், சாருவாகர், குடிகேடர், பதிதகர், கலையர், குடியர் என அறுவகுப்பாகவும் நடுவர் சம்பந்தமாக: "பயிரிடுவோர் பயிரிடுவோர் வருத்தம், பலதொழிலாளர், புரட்டர், தப்புநடையோர், மக்களுக்கு இங்கிலீஷ் பயிற்றுவிக்கத்துணிதல்" என்ற 6 பிரிவாகவும், வைதிகர் சம்பந்தமாக: "சூத்திரப் புரோகிதர், சாமான்யர், பிராமண புரோகிதர் வருத்தம், வைதிகர் தம்மக்கள் இங்கிலீஷ் கற்கத்துணிதல், வைதிகர் மட்டிடல்" என்ற 6 பிரிவாகவும் பிரித்துக்கூறியுள்ளனர். கூறியுள்ள வெண்பா ஒவ்வொன்றும் வாசிக்குந்தோறும் விடா நகைப்பை விளைவிக்கக்கூடியதே. முன்னைய பதிப்புக்களிலிருந்த பிழைகளை முற்றிலும் களைந்து, க்கவாறு இது வெளியுறப் பேருதவி புரிந்தவர், ஏழாவது வட்டை உயர்தர கலாசாலைப் பரிசோதகர்க்குத் துணையாளராக நியமனம் பெற்றுள்ளவராகிய ஸ்ரீ வே. முத்துசாமிஐயர் எம். ஏ. எல். டி. இந்நூலின் விலை அணா மூன்றே. வேண்டுவோர், திருவல்லிக்கேணியில், பெரிய தெருவில் 7-வது நம்பர் வீட்டிலுள்ள ஸ்ரீ என். விசுவநாதையருக்கு எழுதிப்பெறுக.

—பத்திராதிபர்

இனிய தமிழ் நாவல்கள்.

ரத்னபுரிரகசியம்	3-4	இந்திராணி	1—0	தலையணைமந்திரம்	0—8
கன்னியின்முத்தம்	3-0	ரங்கநாயகி	1—0	கோமளம்குமரி	0—
மாண்டிகிருஸ்டோ	2-8	அந்தப்புரக்காதல்	1—0	தீனதயாளு	0—
அராபிக்கதை	2-8	தேவசுந்தரி	0-14	ஞானாம்பாள்	0—
லண்டன்திருடர்	2-4	லீலா	0-12	கமலாம்பிகை	0—
வீரவர்மன்வெற்றி	2-0	மங்கைக்கரசி	0-12	கருணாகரன்	0—
கனகபூஷணம்	2-0	தினகரசுந்தரி	0-12	ஜரத்காரன்	0—
தனபாலன்	1-8	அமீர்ஸிங்	0-12	பஞ்சதந்திரம்	0—
ஜடாவல்லவர்	1-8	பிரேமகாந்தன்	0-12	மிருச்சகடி	0—
நீலா	1-4	கோகிலாம்பாள்	0-12	சாகுந்தளம்	0—
தர்மாம்பாள்	1-2	புஷ்பவனம்	0-10	வசந்தசேனை	0—
விநோதரசமஞ்சரி	1-2	குணசீலன்	0-10	ஸர்தார்ஸிங்	0—
வரதசுந்தரம்	1-0	மாலினிமாதவம்	0-10	கிரிஸல்டா	0—
வசிகரி	1-0	வனஜாக்ஷி	0—8	மங்களாம்பாள்	0—
குணசுந்தரம்	1-0	சாரதாம்பாள்	0—8	அஞ்சனாக்ஷி	2—

N. B.—வி.பி.சார்ஜ் பிரத்தியேகம், அமராவதி என்னும் இனிய தமிழ் நாவலொன்றை மேற்கண்ட புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்தால் இனமாக அனுப்பப்படும், அல்லது போஸ்டேஜுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அதை இனமாக அனுப்புவோம். எல்லாவித தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

எஸ். ஜீ ஐயர் அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.